முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1544

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

21.12.2023, வியாழக்கிழமை

1. ஞான ஒளிகண்ட அரங்கா
ஞான வழிகண்ட தேசிகா
தானதர்மத்தை கொண்டே
தரணிமாற்ற வந்த குருராஜா
2. அரசனே அரங்கனே உன் தர்மம் வெல்லும்
அரசனே அரங்கனே உன் கொள்கை ஆளும் எனக்கூறி
வரமென சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் ஞான அறிவுரை ஆசி

(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 05 ம் நாள், 21.12.2023, வியாழக்கிழமை)

3. ஆசியதும் அரங்கனை கொண்டே
வையகத்தில் அற்புதத்தை ஆறுமுகன் யான்
வாசிவென்ற ஞானியர் படைகளை பெருக்கி
வையகமெங்கும் ஞானிகளை உருவாக்கி
4. ஆக்கியே உலகமாற்றம் நிகழ்த்தவே
அரங்கன் அவதாரத்தை நடத்தி உள்ளேன்
உள்ளபடி அரங்கன் வழி வந்து
உலகை மாற்றம் செய்யக்கூடிய மகா சக்திகள்
5. சிந்தை மிகு அரங்கன் தொண்டர்களுக்கே வாய்ப்பாக இருக்க
செப்பிடுவேன் ஞானம் வேண்டி உலகெலாம் அலையும் அன்பர்கள்
ஞானி அரங்கன் வாழும்
ஓங்காரக்குடில் நோக்கி வந்தால் போதும்
6. தானாக அவர்கட்கெல்லாம்
ஞான சித்தி உறுதியாகி
தரணியில் தவ சித்தியாக
தனிப்பெரும் ஆற்றல் கூடி

7. கூடியே அவர்களெல்லாம் ஞானிகளாக
குரு அரங்கன் தேர்வு செய்த வண்ணம்
வண்ணமுடன் ஆற்றல் மிகுந்து
வையகத்தில் எங்கும் எதிலும் அரங்கன் சக்தி நிரம்பி இருக்க
8. இருக்கவே உலகோர் என் ஆற்றலாக
இணையில்லா மகான்களாக மாறி
துணைபட இந்த கலியுகத்தில்
தெரிவிப்பேன் ஞான யுகமாற்றத்தை
9. மாற்றத்தை உருவாக்கி ஞானிகளாட்சி
ஞானதேசிகன் விரும்பும் வண்ணம் ஆற்றல்பட நிறுவி
அகிலத்தைக் காக்க நேரும்
அருளிய ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—